மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ் நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப் படுகின்ற வேலை நிறைவுபெற்ற, ஓரளவு வேலை நிறைவுபெற்ற தோல்களின் அளவு, அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தோல்களின் அளவில் 85 சதவீதம் ஆகும் என்பதாலும்,

தமிழ் நாட்டில் தோல் தயாரிக்கும் தொழிலில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தொழிலாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளபடியாலும்,

எனவே, இப்போது,

(1) இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டும் என்றும்,

(2) சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் வேலை நிறைவுபெற்ற தோல்களின் ஏற்றுமதி மேம்பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்க வேண்டுமென்றும்,

இந்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இம் மேலவை தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (2) அலுவல் வரிசையில் மாறுதல்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனம் இரண்டிலுள்ள சட்ட முன்வடிவுகளில் 5-வது இன மான 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவும், 6-வது இனமான 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

முன்வடிவும், 8-வது இனமான 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவும் மற்றும் 9-வது இனமான 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவும் முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: அவை முன் உள்ள பிரச்சினை:

"மேலவை விதிகளின் 21 (3) விதியின்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனம் இரண்டிலுள்ள சட்ட முன்வடிவுகளில் 5-வது இனமான 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவும், 6-வது இனமான 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவும், 8-வது இனமான 1975 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவும் மற்றும் 9-வது இனமான 1975 ஆம் ஆண்டு, சட்ட மன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன் வடிவும் முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**தீர்மானம்**, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**4. அரசின் சட்ட முன்வடிவுகள்.**

**(1) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975.)**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளை செய்திறனுக்குதல்) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1975), ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

1954 ஆம் ஆண்டு வக்ஃபுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 29/1954) 64-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ் நாடு மாநில வக்ஃப் வாரியத்தை 1967 நவம்பர் 29 ஆம் நாளிலிருந்து மூன்றாண்டுக் கால அளவிற்கு

---

@ 329–330 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.